

கரூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பேட்டரி வீல் சேர்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார். அருகில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், எம்.எல்.ஏ.க்கள் ஆர்.இளங்கோ, க.சவகாமசுந்தரி, மாவட்ட வருவாய் அலுவலர் விமல்ராஜ், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மோகன்ராஜ், எஸ்.பி. கனகராஜ், பூவை ரமேஷ்பாபு, வேலுச்சாமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# திருவெறும்பூர் எழில் நகர் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

திருவெறும்பூர், பிப். 11 –

சமுதாய வளைகாப்பு விழா திருவெறும்பூர் அருகே உள்ள எழில் நகர் ஓய்வு பெற்ற பெல் ஊழியர்கள் சமுதாய கூடத்தில் நடந்தது.

விழாவிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி தலைமை வகித்தார்.

முன்னதாக திருச்சி மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலர் நித்தியா வரவேற்றார்.

தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனைவி ஜனனி மற்றும் திருவெறும்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.





தமிழக பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 120 பெண்களுக்கு நடந்த சமுதாய வளைகாப்பு விழாவை தொடங்கி வைத்து பேசியதாவது

தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின்படி இந்த சமுதாய வளைகாப்பு விழா நடைபெறுகிறது திருமணம் ஆன நாளிலிருந்து ஒரு பெண் கருவுற்ற நாட்களில் அந்த பெண் உடல் ஆரோக்கியத்தை பேணி காப்பது குடும்பத்தினர் மட்டுமல்ல உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசும் அதைச் செய்ய இருக்கிறது.

தாய்ப்பால் என்பது குழந்தைக்கு முக்கியமாகும் ஒரு குழந்தை கருஉருவாகும் நாளில் இருந்து ஆயிரம் நாட்கள் பொன்னான நாட்களாகும் குழந்தை களின் வளர்ச்சி அவசியமாகும் அது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் ஒவ்வொரு மாதமும் மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் குழந்தைகளின் வளர்ச்சி ஒவ்வொரு விதமாக இருக்கும் அதற்கு மருந்துவர்கள் ஆலோசனை வழங்குவார்கள். இந்த சமுதாயத்தின் மருத்துவராக தமிழக முதல்வர் உங்களுக்கு இதுபோன்ற விழாவை நடத்துகிறார்.

கருவுற்ற பெண்கள் மனதால் கொஞ்சம் உடல் அளவிலும் நலமாக இருக்க வேண்டும் அப்பொமுது அவர்களது குழந்தைகளும் சாத்தானதாகவும் ஆரோக்கியமானதாக இருந்தால் தான் மகிழ்ச்சியாக இருக்கும் சத்தான குழந்தையாக வளர்த்தால் தான் அவர்கள் அறிவாளியாகவும் நல்ல உடல் நலத்துடனும் இருப்பார்கள். அதனால்பெண்கள் வருமுன் காப்போம் சத்தான குழந்தைகளை இந்த சமுதாயத்திற்கு வழங்குவதற்கு சத்தானதை சாப்பிட வேண்டும். நீங்கள் நல்ல குழந்தைகளையும் சத்தான குழந்தைகளை பெற்று தாருங்கள் உங்களது குழந்தைகள் நீங்கள் பள்ளிக்கு அனுப்பி வையுங்கள் நான் பார்த்து கொள்கிறேன். அதன் ஒவ்வொரு வளர்ச்சிக்கும் நான் துணையாக இருப்பேன். இந்த அரசு உங்களுக்கு ஒவ்வொரு உறுதுணையாக இருக்கும் நீங்களும் அரசுக்கு முத்துவேல் கருணாநிதிக்கும் திராவிடம் மாடல் அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

இந்த சமூதாய வளைகாப்பு விழாவில் கலந்து கொண்டு வருங்கால சந்ததியினரை உருவாக்கும் அனைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கும் இந்த கர்ப்ப காலத்தில் தாய் வீட்டு சீராக மங்கல பொருட்களான வளையல், மங்கல நாண், மஞ்சள், குங்குமம், வெற்றிலைப் பாக்கு, வாழைப்பழம் வேப்பம் காப்பு, மாலை மற்றும் துண்டு பிரசுரம், ஆரஞ்சு பழம், அதிரசம் முறுக்குஆகிய அடங்கிய தாம்பூலம் வழங்கப்பட்டு 5 வகையான கலவை சாதமும் பரிமாறப்படும்.

இந்த விழாவில் 120 கர்ப்பிணி பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர் மேலும் அரசியல் கட்சி பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் கருணாநிதி கூத்தைப்பார் பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருவெறும்பூர் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கார்த்திகா நன்றி கூறினார்.

### கழகத் தலைவர் தலைமையில் - இளைஞர் அணி செயலாளர் முன்னிலையில்

# திருப்பூர் இல.பத்மநாபன் இல்லத் திருமண வரவேற்பு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை – முன்னணியினர் வாழ்த்து!!

சென்னை, பிப். 11–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரையில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் இல்லத் திருமண வரவேற்பு விழா நடைபெறவுள்ளது.

திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர்

இல.பத்மநாபன் – ப.தனலட்



சுமி புதல்வி ப.ரக் ஷியா, ஈரோடு மாவட்டம், சுக்கிரமணியம் பாளையம் எஸ்.பெரியசாமி பெ.கவிதா புதல்வன் எஸ்.பெ.வினோத்குமார் திருமண வரவேற்பு விழா இன்று (11.02.2026 – புதன்கிழமை ) மாலை 06.00 மணிக்கு மேல் சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது. திருமண வரவேற்பு விழாவை கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழக துணைப் பொதுச் செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரையில் இந்தியாவின் நம்பர் 1 முதலைசார், திராவிட மாடல் நாயகர், நம் கழகத் தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இந்த மண விழாவில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகி கள், மாவட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் மணமக்களை வாழ்த்தி வாழ்த்துரை வழங்குகிறார்கள். இதில் நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், முன்னோடி கள், அனைத்து கட்சித் தலைவர்கள், மாநில இன்னாள் முன்னாள் நிர்வாகி கள், கழக துணை அமைப்புக்களை சேர்ந்த இந்நாள் முன்னாள் நிர்வாகி கள், திருப்பூர் தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தாராபுரம் சட்டமன்ற தொகுதி கழகப் பொறுப்பாளர்கள், முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான கழக உடன் பிறப்புக்கள் மற்றும் ஆன்றோர், சான்றோர், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகராட்சி அவையாம்பாள்புரம் பகுதியில் காவேரி ஆற்றின் வலது கரையில் ரூ.1 கோடியே 05 லட்சம் மதிப்பீட்டில் தடுப்பு சுவர் கட்டுமான பணிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் மயிலாடுதுறை நகர கழக செயலாளரும், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவருமான குண்டாமணி (எ) என்.செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் மு. ஞானவேலன், பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், நகர்மன்ற துணை தலைவர் சிவக்குமார், நகர்மன்ற உறுப்பினர் சௌ. சர்வோதயன் மற்றும் பலர் உள்ளனர்.



நாகை மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் தலைமை கழக சட்டத்துறை துணைசெயலாளர் பெ. ரகு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளரும், தலைமை கழக வழக்கறிஞர் மூ. தினேஷ்குமார், மாவட்ட தலைவர். ஆர். சிங்காரவேலு மாவட்ட துணைஅமைப்பாளர்கள் : சபாரத்தினம், கே. செந்தில், எல். பாஸ்கர், விஜயகமலன் அரசு வழக்கறிஞர்கள், ஆர்.செல்வராஜ், அன்பழகன், சிவகுருநாதன், தேவி, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பரிபாலன், மற்றும் இளங்கோ, அறிவழகன்,முகம்மது மன்சூர், மணிகண்டன்,பாலசெல்வகுமார், சந்தோஷ்குமார், பிரியங்கா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் முகாம்கள் நலத்திட்ட பயன்கள் மற்றும் 1.80 லட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்டப் பயன்கள் வழங்கியதை தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி பிளாட்டினம் மஹாலில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், உதவி ஆட்சியர் பயிற்சி காஞ்சன் சௌதரி, துணை மேயர் வி.செல்வராஜ், மண்டல குழு தலைவர் ப.க.பழனிசாமி, மாமன்ற உறுப்பினர் செல்லபொன்னி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், நாளை ( 12/02/2026 – வியாழக்கிழமை) திருச்சி தெற்கு மாவட்ட முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்கணித்து. தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து கீழ்கண்ட மாநகர, ஒன்றியம், நகரம், பேரூர் கழகங்களில் 12.02.2026–வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர், பகுதி ஒன்றிய நகர பேரூர் வட்ட வார்டு கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் தொண்டர்கள் என திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

| வ. எண் | மாநகரம் / பகுதி / ஒன்றியம் / நகரம் / பேரூர் | தலைமை | சிறப்புரை | நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | மணப்பாறை ஒன்றியம் | C.ராமசாமி | P.M.சபியுல்லா | புத்தாநத்தம் தபால் நிலையம் |
| 2. | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | C.செல்வராஜ் | N.செந்தில் | வளநாடு, கைகாட்டி, பிராம்பட்டி தபால் நிலையம் |
| 3. | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | K.S.M.கருணாநிதி | K.N.சேகரன் | வாழவந்தான்கோட்டை தபால் நிலையம் |
| 4. | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | C.சின்னடைக்கன் | N.கோவிந்தராஜ் | செவல்பட்டி தபால் நிலையம் |
| 5. | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | R.சீரங்கன் | R.குணசேகரன் | N.பூலாம்பட்டி தபால் நிலையம் |
| 6. | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி | கவிஞர் சல்மா | மருங்காபுரி தபால் நிலையம் |
| 7. | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | V.A.ராஜேந்திரன் | அ.த.த.செங்குட்டுவன் | வையம்பட்டி ரயில்வே ஸ்டேசன் |
| 8. | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C.கங்காதரன் | வண்ணை அரங்கநாதன் | கிழக்குறிச்சி தபால் நிலையம் |
| 9. | துவாக்குடி நகரம் | E.காயாம்பு | பன்னீர் செல்வம் | வடக்கு துவாக்குடி மலை தபால் நிலையம் |
| 10. | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் | M.மாரியப்பன் | திண்டுக்கல் ரோடு, மணப்பாறை தபால் நிலையம், |
| 11. | பொன்னம்பட்டி பேரூர் | K.A.நாகராஜ் | லீலாவேலு | துவரங்குறிச்சி தபால் நிலையம் |
| 12. | கூத்தைப்பார் பேரூர் | கே.தங்கவேல் | இரா.மூக்கன் | கூத்தைப்பார் தபால் நிலையம் |
| 13. | தெற்கு மாநகரம் | மு.மதிவாணன் | இனிகோ இருதயராஜ் | தெப்பக்குளம் தபால் நிலையம் |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


### தவறவிட்ட தங்க நகைகளை

# திரும்பக் கொடுத்த திருவாரூர் தூய்மைப் பணியாளர்!

## பாராட்டி கவுரவித்து ரூ.4 லட்சம் சன்மானம் கொடுத்த பூண்டி கலைவாணன்!

திருவாரூர், பிப். 11 -

திருவாரூரில் மகளின் திருமணத்திற்கு என வாங்கப்பட்ட 20 பவுன் தங்க நகைகளை தவறவிட்டவரிடம் , கீழே கிடந்த நகைகளை மீட்டெடுத்து, சேர்ப்பித்த நகராட்சி தூய்மை பணியாளர் துரை அவர்களின் செயலை பாராட்டும் விதமாக அவருக்கு மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்கள் அவரது குடும்பத்திற்கு மருத்துவ செலவுக்கு என 4 லட்சம் ரூபாயை கொடுத்து ஊக்கப்படுத்தியுள்ளார்.



திருவாரூரைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன்- முத்து லட்சுமி தம்பதியர் தங்கள் மகளுக்கு திருமணம் என்பதால் அதற்கென 20 பவுன் தங்கநகைகள் மற்றும் 1கிலோ வெள்ளி ஆகியவற்றை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு திரும்பிய போது, அந்த நகைகளை தவறவிட்ட நிலை யில்,அந்த நகைகளை திருவாரூர் நகராட்சி பணியாளர் துரை என்பவர் கண்டெடுத்து, அதன் உரிமையாளரிடம் காவல் துறையினர் முன்னிலையில் பத்திரமாக சேர்த்தார்.

இந்த தகவலை அறிந்த மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. நகராட்சி பணியாளரை அழைத்து, அவரை பாராட்டியாதோடு அவரின் குடும்பநிலை குறித்து அறிந்து, அந்த எழமை நிலையிலும் அவரது நேர்மையை பாராட்டும் விதமாக , அவரது மகனின் மருத்துவ சிகிச்சைக்காக 4 லட்சம் ரூபாயை அவருக்கு அன்பளிப்பாக அளித்தார்.

இந்த நிகழ்வின்போது மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், காவல் கண்காணிப்பாளர் கருண் காரட் ,மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, ஒன்றிய செயலாளர் சேகர் என்கிற கலியபெருமாள் ,நகர செயலாளர் வாரை. பிரகாஷ், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ஷோபா கணேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.